REGISTERED AS NEWSPAPER

# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 122 18—10—1996

இதழ்: 5 விலை ரூபா 5

**அருள் வாக்கு**

எனக்கு வலுவூட்டுகிறவரின்
துணை கொண்டு எதையும்
செய்ய எனக்கு ஆற்றல் உண்டு
(பிலி. 4 : 13)

21 OCT 1996

யாழ் மறைமாவட்ட

## நீதிக்கும் சமாதானத்துக்குமான குழு

**யாழ். மறைமாவட்ட நீதிக்கும்- சமாதானத்துக்குமான குழு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. மனித முன்னேற்ற நடுநிலையத்தின் உப குழுவாக இது செயற்படுகின்றது.**

மக்கள் இடம் பெயர்வின் விளைவாக யாழ். மறைமாவட்ட நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் அங்கும் இங்கும் சிதறுண்டிருப்பதால் அதன் செயற்பாடுகள் குன்றிப் போயுள்ள இக்காலகட்டத்தில் அவ்வெற்றிடத்தை தற்காலிகமாக நிரப்புவதற்காக இக்குழு அமைக்கப்பட்டது.

கத்தோலிக்க திரு மறையை அடித்தளமாகக் கொண்டு நீதி, சமாதானம், மனித மாண்பு, மனித உரிமைகள், மனித மேம்பாடு என்பவற்றுக்காக பாடுபடுவதே இதன் நோக்கமாகும்.

எம் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் வெகுவாக மீறப்பட்டுக் கொண்டிருக்கின்ற இக்கால கட்டத்தில் இவ்அமைப்பின் பணி அவசியமாகத் தேவைப்படுவதை உணர்ந்து இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

## அருட்தந்தை லொறற் நினைவாக நூலகம்

மறைந்த அருட்தந்தை ஜோண் லொறற் நினைவாக அவரது பிறந்த தினமான ஒக்ரோபர் 10 யாழ் மரியன்னை பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அதனையடுத்து பீடப்பணியாளர்களின் மரம் நாட்டு நிகழ்வு இடம்பெற்றது.

மாலை 3 மணியளவில் விசேட பஜனை வழிபாடு நடைபெற்றது. மறைந்த அருள்தந்தையின் திருவுருவப் படத்தை அருள்தந்தை ஜே. பி. ஈ. செல்வராஜா திரைநீக்கம் செய்துவைத்தார்.

அருள்தந்தை ஜோண் லொறற்றின் தாயார் அவரது நினைவு நூலகத்தை திறந்து வைத்தார்.

'ஈழத்திருச்சபை வரலாற்றில் பின்புலத்தில் அருள் தந்தை ஜோண்லொறற் அடிகளாரின் வாழ்வும் மரணமும்', என்ற தலைப்பில் அருள்திரு. அருள்நேசன் சிறப்புரையாற்றினார்.

## 'தொடுகை' சஞ்சிகை

செல்வன் எமிலின் 'தொடுகை' என்ற கையெழுத்து சஞ்சிகையின் அறிமுக விழா இளைஞர் உருவாக்கல் அமைப்பினால் 3-10-96 அன்று நடாத்தப்பட்டது.

இவ்விழாவில் அருட்தந்தையர்களான சூசைநாதன் இருதயதாஸ், ரவிச்சந்திரன் திரு. யோசப்பாலா ஆகியோர் உரையாற்றினர்.

அருட்திரு R. சூசைநாதன்:
பல இலக்கிய படைப்புக்களை கண்ட யாழ்ப்பாணம் தற்போதைய சூழலில் இலக்கியத்தில் வரட்சி கண்டுள்ள இத்தருணத்தில் கணனிக்கு சவால்விடும் கையெழுத்து ஏடாக அனைவரின் உள்ளத்தைத்தொடும் தொடுகை

( தொடச்சி 6 ஆம் பக்கம் )

## முன்னாள் ஆயர் கொழும்பு பயணம்

முன்னாள் யாழ். ஆயர் வ. தியோகுப்பிள்ளை அவர்கள் சுகயீனம் காரணமாக சிகிச்சை பெறுவதற்காக கொழும்பு சென்றுள்ளார்.

ஆயருக்கு துணையாக அருட்தந்தை செல்வராஜாவும் சென்றுள்ளார்.

நல்ல உடல் நலம் பெற்று அவர் விரைவில் திரும்ப பாதுகாவலன் சார்பில் வாழ்த்துகிறோம்.

## வெள்ளிவிழா நாயகர்கள்

அருட்தந்தையர்கள் பீற்றர் துரைரட்னம், ஏ. எவ். எக்ஸ். ஜெயசேகரம் ஆகிய இருவரும் தமது குருத்துவ வாழ்வின் 25 வது ஆண்டு நிறைவுதினத்தை 20. 11. 96இல் கொண்டாடுகின்றனர்.

இருவரும் 1971ம் ஆண்டு ஆயர் எல். ஆர். அன்ரனி அவர்களால் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

அருட்தந்தை பீற்றர் துரைரட்னம் வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

யாழ் ஆசனக் கோயில், உயிலங்குளம், கரவெட்டி, நெடுந்தீவு, குருநகர், மயிலிட்டி, மாதகல், இளவாலை பங்குகளில் பணியாற்றி தற்போது மிருசுவில் பங்கில் பணிபுரிகிறார்.

கடந்த வருடம் மக்கள் இடம் பெயர்ந்து சென்ற போது தம்மாலான பல்வேறு உதவிகளை இம்மக்களுக்கு இரவு பகல் என்று பாராது செய்து அன்புடன்ஆதரித்ததை எவருமே மறக்கமாட்டார்கள்.

அருட்தந்தை ஏ. எவ். எக்ஸ் ஜெயசேகரம் யாழ் கச்சேரி வீதி, சுண்டுக்குளியை சேர்ந்தவர்.

கரவெட்டி, பருத்தித்துறை,

( தொடர்ச்சி 6 ஆம் பக்கம் )

## மரியாயின் சேனை தீர்மானம்

சுற்றிவளைப்பு, தேடுதல் என்ற போர்வையில் ஒன்றுமறியாத இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்படுவது குறித்து மரியாயின் சேனை யாழ் கொமிற்சியம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி யாழ் ஆயருக்கு சமர்ப்பித்துள்ளது.

அதில் சிலர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு அதை ஒருவருக்கும் வெளியிடப்படாது என்ற எச்சரிக்கையுடன் விடுதலை செய்யப்படுகிறார்கள்.

வேறு சிலரை எங்கே வைத்திருப்பதென்று பெற்றோருக்கு தெரிவிக்காமல் விசாரணையின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள்.

இதில் சம்பந்தப்பட்ட பெற்றோர் உறவினர்கள் ஆழ்ந்த துயருற்று அநீதியை எதிர்த்து முறையிட யாரை அணுகுவோம் என்று அங்கலாய்க்கின்றனர்.

நிரபராதிகள் தண்டிக்கப்படலாகாது என்ற மனிதநேய அடிப்படைக்கமைய ஸ்தாபன ரீதியாக நீதிக்கும் மனித உரிமைக்கும் குரல்கொடுக்கும் கத்தோலிக்க திருச்சபையின் யாழ் ஆயர் அவர்கள் பெற்றோர்களின் இயலாத பரிதாப நிலையை கருத்தில் கொண்டு நீதியை நிலைநாட்டுவதற்குரிய வழிமுறைகளை செயல்படுத்த ஆவன செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்வதுடன், இக்கருத்துக்களுக்காக சேனையார் அனைவரும் தொடர்ச்சியாக செபிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## வவுனியாவில் மறையுரைஞர் இல்லம்

கொழும்புத்துறை வசந்தகத்தில் இயங்கி வந்த அமல மரித்தியாகிகளின் மறையுரைஞர் இல்லத்தின் கிளை இல்லமானது வவுனியா குட்செற் றோட் 26 A. இலக்க இல்லத்தில் இயங்குகிறது.

## அம்பிட்டியாவில் குருத்துவக்கல்வி தொடர்கின்றனர்

உருத்திரபுரம்—ஆரோபணம் புனிதசவேரியார் குருமடத்தில் கல்வி பயின்ற அமல மரித்தியாகிகள் சபையின் ஏழு மெய்யியல் மாணவர்கள் தமது குருத்துவக் கல்வியை கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் தொடர்கின்றனர்.

## நித்திய அர்ப்பணமும் தியாக்கோன் பட்டமும்

அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அல்றின் அந்தோனிமுத்து, ஜெறோம், ஆகிய அருள்சகோதரர்கள் 2.10.96 அன்று மடுத்திருப்பதியில் யாழ். மாகாண முதல்வர் அருள்தந்தை பி. பி. பிலிப் அ. ம. தி தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் தம்மை நித்தியத்துக்கும் இறைவனுக்கு அர்ப்பணித்தார்கள்

இம்மூன்று அருள்சகோதரர்களுக்கும் 15.10.96 அன்று மடுத்திருப்பதியில் மன்னார் ஆயர் இ. யோசப் அவர்களால் தியாக்கோன் பட்டமும் வழங்கப்பட்டது.

## வேலணை சாட்டி திருநாள்

பிரசித்தி பெற்ற வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலய வருடாந்த திருநாள் 29- 09- 96 ஞாயிறு திருப்பலியுடன் நடைபெற்றது.

கடந்த ஏழு வருடங்களின் பின்னர் இத்திருநாள் சிறப்பாக நடைபெற்றது.

பெரும் திரளான பக்தர்கள் இதில் கலந்துகொண்டனர்.

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

பலாலி ஆசிரிய கலாசாலைக்கு 20.09.96இல் வெளியான அரசாங்க வர்த்தமானியில் கத்தோலிக்க நெறிக்கும் ஏனைய 10 நெறிகளுக்கும் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

31.12.1995 வரை ஆசிரியராக நியமனம் பெற்றவர்களும் 48 வயதிற்குட்பட்டோரும்31.10.96க்குமுன் விண்ணப்பிக்கவேண்டும். சகல விபரங்களும் 20.09.96இல் வெளியான அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது

---

எழுத்தாளர்களே,

நத்தார் சிறப்பிதழுக்கான ஆக்கங்களை நவம்பர் 20க்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.

பாதுகாவலன்
அ. பெ. எண் 2
யாழ்ப்பாணம்

---

**அடுத்த இதழ் நவம்பர் 15 இல்**

# திருவிவிலியத்தில் மரியாதைப் பன்மை

உலகில் உள்ள ஏறக்குறைய எல்லா மொழிகளுமே ஆண் ஆதிக்க மொழிகள் தாம். ஆண்களே பெருவாரியான இலக்கியங்களைப் படைத்துள்ளனர்; இலக்கணங்களை வகுத்துள்ளனர். ஆண்பால் விகுதிகளே பெண்பாலையும் உள்ளடக்குகின்றன. எடுத்துக்காட்டாக, 'மனிதன்' என்றும் ஆண்பால் விகுதி கொண்ட சொல் ஆணையும், பெண்ணையும் குறிப்பதாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. 'சகோதரர்களே' என்று கூப்பிடும்போது பொதுவாகச் சகோதரிகளும் அதில் அடங்கியிருக்கிறார்கள். சமூக வாழ்வில் பெண்கள் ஆண்களால் அடக்குமுறைக்கு உள்ளாவதுபோல இலக்கணத்திலும் அவர்கள் ஆண்விகுதிக்குள் அடக்கி வைக்கப்படுகிறார்கள். சமுதாயத்தின் பிரதிபலிப்பே இலக்கியமும் இலக்கணமுமாகும்!

விவிலியத்தின்பிறப்பிடமான இஸ்ரயேல் சமுதாயமும் ஓர் ஆண் ஆதிக்கச் சமுதாயமே. பலவேளைகளில் ஆண், பெண் ஆகிய இருபாலாருக்கும் என்று கூறப்பட்டவைகள் ஆண் ஆதிக்கச் சமுதாயத்தின் தாக்கத்தால்ஆண்கள்மேல் ஏற்றிக் கூறப்பட்டுள்ளன. திருமுகங்களிலும்திருத்தூதர் பணியிலும் சகோதரரையும் சகோதரிகளையும் குறிப்பதற்கு ஆண்பாலான 'சகோதரர்களே' என்னும் சொல்லே பயன்படுத்தப்படுகிறது. மனிதன், ஒருவன், எவனும் என்னும் ஆண்பால் சொற்கள் ஆண்களையும் பெண்களையும் குறிக்கும் வகையில் பயன்படுத்தப் படுகின்றன. (மத் 4 : 4) 'மனிதன் அப்பத்தினால்மட்டு, மன்றி கடவுளின் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கிறான்.' மத் 7 ; 9 . . . தன் மகன் அப்பம் கேட்டால் ஒருவன் கல்லைக் கொடுப்பானா?; மத் 6 ; 24 , எவனும் இரு தலைவர்களுக்கு ஊழியம் செய்ய முடியாது; மத் 13;9 . . . 'கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்' என்பதும் ஆணாதிக்கச் சொல்லாட்சியே!

இவ்வாறு ஆண் ஆதிக்கத் தாக்கத்தால் ஆண்மேல் ஏற்றிக்கூறப்பட்டவைகள் பொது மொழிபெயர்ப்பில் இருபாலாருக்கும் பொருந்தும் முறையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ''பல நேரங்களில் 'மனிதன்' மனிதராக, 'எவனும்' எவராக, 'ஒருவன்' ஒருவராக அல்லது எவராக மாறி, இருபாலாருக்கும் பொருந்தும் முறையில் அமைகின்றன. 'கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்' என்பது 'கேட்கச் 'செவியுள்ளோர் கேட்கட்டும்' என்றாகிறது.

சில எடுத்துக்காட்டுகள்;

| பழைய மொழிபெயர்ப்பு | புதிய மொழிபெயர்ப்பு |
| --- | --- |
| லூக் 6 : 30 | |
| ''உன்னிடம் கேட்பவன் எவனுக்கும் கொடு. உன் உடைமைகளைப் பறிப்பவனிடமிருந்து திருப்பிக் கேட்காதே.'' | ,,உங்களிடம் கேட்கும் எவருக்கும் கொடுங்கள். உங்களுடைய பொருட்களை எடுத்துக் கொள்வோரிடமிருந்து அவற்றைத் திருப்பிக் கேட்காதீர்கள்.'' |
| மாற்கு 8 : 34 – 35 | |
| ''பின் தம் சீடரையும் கூட்டத்தையும் அழைத்து, என்னைப் பின்செல்ல விரும்புகிறவன் தன்னையே மறுத்துத் தன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின் தொடரட்டும். ஏனெனில் தன் உயிரைக் காத்துக்கொள்ள விரும்புகிறவன் அதை இழந்து விடுவான். என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் தன் உயிரை இழப்பவனோ அதைக் காத்துக்ொள்வான்.'' | '' பின்பு அவர் மக்கள் கூட்டத்தையும் சீடரையும் தம்மிடம் வரவழைத்து, என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின் பற்றட்டும். ஏனெனில் தம் உயிரைக்காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவார். என் பொருட்டும் நற்செய் தியின் பொருட்டும் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக் கொள்வார்.'' |
| மத் 18 : 15 | |
| '' உன் சகோதரன் உனக்கு எதிராகக்குற்றஞ் செய்திருந்தால் நீ போய், நீயும் அவனும் தனித்திருக்கையில் அவனைக் கண்டித்துப் பார். அவன் உனக்குச் செவிசாய்த்தால் உன் சகோதரனை உன் வசமாக்கிக்கொள்வாய்!'' | '' உங்கள் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் உங்களுக்கு எதிராகப் பாவம் செய்தால் நீங்களும் அவரும் தனித்திருக்கும்போது அவரது குற்றத்தை எடுத்துக்காட்டுங்கள். அவர் உங்களுக்குச் செவி சாய்த்தால் நல்லது; உங்கள் உறவு தொடரும்.'' |
| 1 தெச 2 : 17 | |
| ''சகோதரர்களே,சிறிது காலம் உங்களை விட்டுப் பிரிந்து தவித்தோம். உடலால் மட்டுமே பிரிந்தோம், - உள்ளத்தால் பிரிந்திருக்கவில்லை -உங்கள் முகத்தைப் பார்க்க மிக்க ஆவலாய் ஏங்கி இருந்தோம்'' | ''அன்பர்களே, நாங்கள் உள்ளத்தால் அல்ல, உடலால் மட்டுமே உங்களை விட்டுச் சிறிது காலம் பிரிந்து தவித்தோம். உங்கள் முகத்தைக் காண பேராவலோடு ஏங்கியிருந்தோம்.'' |
| 1 தெச 4 : 13 | |
| ''சகோதரர்களே, இறந்தோரைப்பற்றி உங்களுக்கு ஐயமிருத்தலாகாது. நம்பிக்கையற்ற ஏனையோரைப்போல் நீங்களும் வருந்தலாகாது.'' | "சகோதர சகோதரிகளே, இறந்தோரைப் பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டும் எனநாங்கள் விரும்புகின்றோம். எதிர்நோக்கு இல்லாத மற்றவர்களைப்போல நீங்களும் துயருறக் கூடாது.'' |

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

# மொழி பெயர்ப்பில் மாற்றங்கள் அவசியம்

❀ ஆயர் வ. தியோகுப்பிள்ளை

அண்மையிலே வெளியான திருவிவிலிய மொழிபெயர்ப்பில் உள்ள சில குறைபாடுகள் பற்றி யாழ் முன்னாள் ஆயர் வ. தியோகுப்பிள்ளை சுட்டிக் காட்டியுள்ளார், இக்குறைபாடுகளை நீக்க தமிழ் நாட்டு ஆயர்களுடன் தொடர்பு கொள்ளும்படியாக யாழ் ஆயர் சவுந்தரநாயகத்தை இவர் கேட்டுள்ளார்.

திருவிவிலியத்தை கிரேக்க மொழி அறிந்தவர்கள் மட்டுமல்ல சாதாரணமானவர்களே பயன்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் சில கிரேக்க பதங்களை தமிழில் மொழி பெயர்ப்பது அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார். உதாரணமாகப் பின் வருவனவற்றை அவர் தந்துள்ளார்.

1 '' ரபி '' என்னும் சொல் ,' போதகரே என்று மொழி பெயர்ப்பது அவசியம் ( மத் 23 ; 8 , மாற். 9 : 5 14;45, யோவான் 1 :38 ).

2 ''கிறியே'' என்ற கிரேக்க சொல் ''ஐயா'' என்று அல்ல, '' ஆண்டவரே'' ( மாற். 7 ; 28, லூக் 7 : 16) என்றே மொழி பெயர்க்க வேண்டும்.

3 இஸ்ராயேல் மக்களைச் சபிக்க பாலக் கேட்டுக் கொண்டது '' பிலயாம்'' என்பவரையே. இந்தப் பெயர் 'பிலயாம்' என்றில்லாது, 'பாலாம்" என்றே எழுதப்பட வேண்டும் ( எண்ணிக்கை 22 : 5 , 23 ; 2பேதுரு 2 : 15;யூதா 11 ).

# ஆசிரியர் தினத்தில்

மாணவரின் நலனுக்காக தன்னை முழுவதும் அர்ப்பணித்து பணியாற்றுபவரே நல்லாசிரியர். மாணவரை அறிவிலே உயர்த்துகின்ற ஏணியாகவும், கரைகாணா கல்விக்கடலில் வலம்வர வைக்கின்ற தோணியாகவும், எதிர்காலத்தில் மாணவர் செல்லவேண்டிய வழிமுறைகளையும், வாழ்க்கைப் படிகளையும், தெளிவாக்கித்துலங்குகின்ற கலங்கரை விளக்காகவும் ஆசிரியர் விளங்குகின்றார். பெரியவர்கள் பலரும் எழுத்தை அறிவிக்கின்ற ஆசான்களை இறைவனை ஒத்தவர்கள் என்று கூறுகின்றார்கள். எனவே மாணவருக்கு இறைவனால் அளிக்கப்பட்ட வழிகாட்டி ஆசிரியர்.

பெற்றோருக்கு அடுத்தபடியாக ஒல்வொரு குழந்தையும் ஆசிரியரிடம் அனுப்பப்படுகிறது. பாலர் வகுப்பு முதல் பட்டப் படிப்பு வரை இவர்களின் பணி நீண்டுகொண்டே செல்கிறது. மாணவர் ஆசிரியரின் சொல், செயலை மட்டுமல்ல, அவர் வாழ்க்கை முறையையும் தமதாக்கி கொள்கின்றனர். எனவே மாணவரைமையப்படுத்திய கல்வியும், தியாகசிந்தையும், சேவைமனப்பாங்குமுள்ள வழிநடத்தலும் ஒரு ஆசிரியருக்கு இன்றியமையாதது.

இறைவனின் பிரதிநிதிகளான ஆசிரியர்களைக் கௌரவிப்பதற்காக உலக ஆசிரிர் தினம் எல்லா நாடுகளிலும் அனுஷ்டிக்கப்படுகிறது. மாணவர்கள் தாம் பெற்றுக் கொண்ட கல்வி, ஒழுக்கம், வழி நடத்தல் என்பவற்றுக்கு நன்றி கூறவும் தமது அன்பை வெளிப்படுத்தவும் இன்நாளை பேருவகையுடன் கொண்டாடுகிறார்கள். ஆரம்ப காலத்திலிருந்தே 'குருபக்தி' என்பது மிகவும் பொருள் நிறைந்ததாக இருந்தது. இன்னும் இதன் ஒரு வெளிப்பாடே ஆசிரியர் தினவிழா என்றால் அது மிகையாகாது.

கத்தோலிக்க ஆசிரியர்களாகிய நாம் நல்லாசிரியராகிய கிறிஸ்துவின் அன்பு வழியில்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம் )

# இறந்தோர் இறப்போரிற்கு எழுதும் மடல்

நாங்கள் உங்களுடன் வாழ்ந்த போது...
எம்மை வாழ விடாது கஷ்டப்படுத்தினீர்கள் — எம்மை எப்படி சாகடிக்கலாம் என நிந்தமும் நினைத்தீர்கள். இந்த கிழடு எப்ப சாகும் என எம் சாவையே எதிர்பார்த்து காத்திருந்தீர்கள்.

ஆனால் நாம் செத்த பின்...
ஏன் எம்மை பெட்டியில் கிடத்தி ''சவம்'' — என்று புதிய பெயர் தந்து - மணக்குது என்று சொல்லி செண்ட் தெளித்து விட்டு எட்ட இருந்து மூலையில் முதலைக்கண்ணீர் வடிக்கிறீர்கள். ஒப்பாரி வைக்கிறீர்கள். அந்த நேரம் பெட்டியில் கிடந்த நாம் பெட்டியோடு எரியவில்லையே என கவலைப்பட்டோம்.

இரா முழுவதும் சவத்தோடு இருக்க வேண்டும் என்று சொல்லி – காட்ஸ் அடித்தீர்கள். கரம் விளையாடினீர்கள். சாராயம் குடித்தீர்கள். இவை எல்லாம் பார்த்து புழுத்துத் தானே, சவம் மணந்தது – அது புரியவில்லையா?

வானொலியில்...
மூத்தவன் யு. கே.யில், இளையவன் யு. எஸ். ஏ இல், மகள் கனடாவில், என்று மூன்று வேளையும் காசு கொடுத்து புழுகினீர்கள் — நாம் உயிருடன் வாழ்ந்த காலத்தில் கஞ்சி கூட தராத கஞ்சர் கூட்டமல்லவா நீங்கள். பின் ஏன் இந்த போலி வேடங்கள்?

ஆக்கம்: நியூமன் பொன்னையா
உதவி: காற்றில் கலந்தவை

உங்களுடன் நாம் வாழ்ந்த காலத்தில் எம்மை நாய்களே பேய்களே என்றும் வாயாரபுகழ்ந்தீர்களே. ஆனால் இப்போதோ செல்வங்களே மண்ணின் மணிக் கொழுந்துகளே — என்று கவிதைகள் வடிக்கிறீர்களே. ஏன் இந்த போலி நாடகங்கள்?

நாம் இறந்த பின்...
கோயில் மணி அடிக்க வேண்டும்,
சுவாமி வீடு வர வேண்டும்,
ஆலயத்தில் வைத்து செபிக்க வேண்டும்,
வருடம் ஒரு பூசை வைக்க வேண்டும் என்றெல்லாம் நிற்கிறீர்கள் — ஆனால் நாம் வாழும் பொழுது – எம்மை
கோயிலுக்கு கூட்டி செல்ல முனைந்தீர்களா? – இல்லை
தவறிய போது இறைவழி காட்ட வந்தீர்களா?

நொவெம்பர் மாதம் என்றதும், சவக்காலைகளை சுத்தம்செய்கிறீர்கள். கல்லறைகளுக்கு வெள்ளை அடிக்கிறீர்கள் – இது நீங்கள் உங்களிற்கும் உங்கள் மனச்சாட்சிக்கும் அடிக்கும் வெள்ளைகள். இவற்றை எல்லாம் பார்த்து – நாம்
இங்கு சிரிக்கின்றோம். அழுது கொண்டே சிரிக்கின்றோம்.

நீங்களும் ஒரு நாள்...
சவமாக மாறுவதை நினைவில் கொள்ளவில்லையா?
நீ மட்டும் இவ்வுலகில் நிரந்தரமாக இருக்க தீர்மானித்து விட்டாயா? போலியாக வாழாமல் உண்மையாக வாழ்வாயா?


நன்றி வணக்கம்
— இறந்தோர் —

# போதனையல்ல

"அப்பா இன்னும் நீங்கள் போகவில்லையா?'' என்ற மகள் யாழினியின் குரல் கேட்டு 'வெளிக்கிடறன் பிள்ளை'' என்று பதில் கூறிய யோசப் "ஏன் பிள்ளை தீபனின் வகுப்பாசிரியர் வரச் சொல்லியிருப்பார்?'' எனக்கேட்டார். "நீங்கள் போய்க்கேட்டால்த்தானே தெரியும். கெதியாய்ப்போங்க'' எனத் துரிதப்படுத்தினாள் யாழினி. "சரி பிள்ள போயிட்டு வாறன்'' எனப் புறப்பட்டுப் போனார் யோசப். பாடசாலை அதிபரிடம் தான் வந்த விடயத்தைக் கூறியதும் "இருங்கோ ஆசிரியர் வந்து சந்திப்பார்'' என்ற அதிபரின் பதிலைக் கேட்டு அமர்ந்தார் யோசேப்.

அமைதியாக இருந்த சூழ்நிலை அவரை மூத்த மகன் குமாரைப்பற்றிச் சிந்திக்கவைத்தது. "அவன் ஏன் இப்படி நடந்து கொள்ளுகிறான்? எவ்வளவு சொல்லியும் திருந்துகிறான் இல்லை.'' அன்றொரு நாள் பங்குச் சுவாமி குமாரின் தாயை அழைத்து "உங்கள் மகன் கோவிலுக்கு வாறானா? அல்லது மற்றவர்களைக்குழப்ப வாறானா? இப்படி வாறதை விட வராது விடுகிறது நல்லது. அவனுக்குப் புத்தி சொல்லுங்கோ'' என்றார். அதனைத் தாய் மகனிடம் கூறிய போது "பாதருக்கு வேற வேலையில்லை, மற்றவர்களைக்குறை சொல்லாமல் இருக்க இயலாது. இந்தக் கோவிலுக்குப் போகாமல் வேறொரு கோவிலுக்குப் போனால் போச்சு'' என்றான். இன்னொரு நாள் குமாரைப் படிப்பித்த ஆசிரியர் "என்னப்பா யோசப் மகன் குமாரைக் கவனிக்கிறதில்லையா? சும்மா றோட்டுச் சுற்றுகிறான். இந்தச் சின்ன வயசில புகைப் பிடிக்கவும் பழகி விட்டான். கொஞ்சம் கண்டித்து வையுங்கோ. காலம் கெட்டுப் போய்க் கிடக்கிறது. தேவையில்லாத சிக்கல்களில் அகப்பட்டுத் துன்பப் படப்போகிறான்,'' என்றார். அவனுக்கு எவ்வளவோ சொல்லியாச்சு ஆனால் அவன்... பெருமூச்சு விட்டுக் கொண்டார். சிந்தனையில் ஆழ்ந்திருந்த யோசேப்பைக் கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியரின் குரல் சுய நிலைக்குக்கொண்டு வந்தது.

"பிள்ளைகளே! உலகில் மிக இலகுவானதொன்று என்னவென்றால் போதனை செய்வதுதான். பலபேர் பல



விடயங்களைப் பற்றிப் பல்வேறு உதாரணங்களுடன் போதிப்பதைக் காணலாம். இப்படியான போதனைகளை நாம் அனைவரும் கேட்டிருக்கின்றோம். ஆனால் நாம் அப்போதனைகளைக் கேட்டு நடக்கின்றோமா? நடக்காததிற்கு காரணம் என்ன? சொல்லுங்கோ'' என்றார் ஆசிரியர். "போதிப்பவர்கள் அதன் படி தாங்கள் நடப்பதில்லை, அது தான் காரணம்'' என்று பதில் கூறினான் ஒரு மாணவன். "சுரேஷ் நீர் கூறுவது உண்மை தான். எமது மீட்பராம் இயேசுவை நோக்குவோம். மக்கள் எதனைச்செய்ய வேண்டும் எனப் போதித்தாரோ அதனைத் தானே செய்து காட்டினார். இராப்போசனத் தினத்தன்று இராயப்பரிடம் மற்றச் சீடர்களின் கால்களைக் கழுவு என இயேசு கூறியிருந்தால் இராயப்பர் மறுப்பின்றி கால்களைக் கழுவியிருப்பார். ஆனால் அந்தத் தொண்டாற்றும் பணி அவர் வாழ்நாளில் தொடர்ந்து நிலைத்திருக்காது. இயேசு அவர்களுக்கு முன்மாதிரியாகச் சீடர்களின் கால்களைக் கழுவிச் செயற்பட்டதினால் சீடர்கள் அவரின் பணியைத் தொடர்ந்தனர். எனவே, பிள்ளைகளே! நாம் மற்றவர்களுக்குப் புத்திமதி கூறுவதற்கு முன்னர் நாம் அதனை எமது வாழ்வினில் கடைப்பிடிக்க வேண்டும். இல்லாது போனால் அந்தப் புத்திமதிகளை ஏற்று ஒருவரும் நடக்க முன்வரமாட்டார்கள். "சேர் மதுவுக்கு அடிமையான ஒரு தந்தை தன் பிள்ளையும் அந்த நிலைக்கு வரக்கூடாது எனகண்டிப்பது தவறானதா?'' எனக் குறுக்கிட்டு ஒலித்தது மாணவன் ஒருவனின் குரல். "பிரதீப் தந்தை தன் மகன் நல்லவனாக வாழவேண்டுமென எதிர்பார்ப்பது தவறானதல்ல. ஆயினும் தந்தை குடிப்பழக்கத்தின் தீமையை நன்கு உணர்ந்த பின்பு அதிலிருந்து விடுபடாது மகனைத் திருத்த முயல்வது பயனளிக்கக் கூடிய விடயமாக இருக்காது'' என்று பதில் கூறினார் ஆசிரியர். இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டி

இ. கிறிஸ்தோப்பர்
யா/ புனித சாள்ஸ் ம.வி

ருந்த யோசேப்புக்குத் தன் மூத்த மகனின் தவறான நடத்தைக்குக் காரணம் தான்தான் என்ற குற்ற உணர்வு உறுத்தத் தொடங்கியது. ஆசிரியரின் கருத்து உண்மையானதும் தனக்குப் பொருத்தமானதுமாக உள்ளதை உணர்ந்தார். இந்நேரம் தீபனின் வகுப்பாசிரியர் வந்து "நீங்கள்தான் தீபனின் அப்பாவோ? தீபன் நல்ல மாணவன். நன்றாகப்படித்துக் கொண்டு வந்தான். ஆனால்! இப்ப கொஞ்சம் படிப்பில் அக்கறை இல்லாதவனாக இருக்கிறான். கொஞ்சம் நீங்கள் கவனிக்க வேண்டும்'' என்றார். "ஓம் சேர். நான் கட்டாயம் கவனிப்பேன் என்று பதில் கூறிய யோசேப்பின் குரலில் உறுதி தொனித்தது. பாடசாலையிலிருந்து வீட்டிற்கு வந்து சேர்ந்த யோசேப் வீட்டினுள் மகள், மகன் இருவரின் குரல்கள் கேட்டுச் சற்று நிதானித்தார்.

"டேய் குமார்! நீ ஏன்ரா இப்படி நடந்து கொள்கிறாய்'' எனக் கவலையுடன் கேட்டது மகள் யாழினியின் குரல். "எப்படியக்கா நடக்கின்றேன்?'' என்றது குமாரின் குரல். "குமார் நீ திருந்தவே மாட்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## குருசுமுத்தண்ணையின் கிசுகிசு 94

குருசு: என்ன அடைக்கலம்? பல மூட்டை முடிச்சுக்களோட வெளிக்கிட்டுட்டாய்.

அடை: ஒரு பயணம் போறன் அண்ணே! நாடு இருக்கிற சீரில எப்ப திரும்பிறனோ அது தான்......

குருசு: இந்த சின்னப் பயணத்திற்கே இத்தனை அடுக்குகள் எண்டா அங்கால போறதெண்டா எத்தினை ஆயத்தம் வேணும்?

அடை: இதென்ன அண்ணே அபசகுனம் மாதிரி கதைக்கிறியள். நல்லதை விட்டுட்டு...

குருசு: எட தம்பி! நல்லதைத்தானே கேட்டனான். நிரந்தரப் பயணத்தைப் பற்றியும் கொஞ்சம் சிந்திச்சா என்ன தம்பி?

அடை: அங்கால போற வயசே எங்களுக்கு?

குருசு: அடதம்பி, இப்ப எல்லாம் வயசு, வளர்த்தி பார்த்தா போகினம்? பூவும், பிஞ்சும், காயும், கனியும் எண்டு ஓரேயடியாய் அள்ளுப்படேக்க.

அடை: சாகிறதை நினைச்சா பயமாய்த்தான் இருக்கண்ணே....

குருசு: கண்டதையும் காவித்திரியாம இருக்கிற ஆத்துமத்தை சுத்தப்படுத்தி ஆயத்தமாய் இருந்தா அந்தப் பயணமும் சுகமாய்த்தான் இருக்கும் பாரு.

# சமாதானத்தை நோக்கி....

"அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்'' (மத், 5 ; 9).

இன்று சமாதானம் வேண்டி எல்லா மனித உள்ளங்களும் ஏங்கித் தவிக்கின்றன, நாடுகள் ஏங்குகின்றன; குடும்பங்கள் அங்கலாய்க்கின்றன, மனிதன் தவிக்கின்றான். புயல்கள் கொந்தளிப்புக்கள் மத்தியிலும் நாம் சமாதானமாக வாழமுடியும், குழப்பமற்ற நிலையே மெய்யான சமாதானம் என்று சொல்ல முடியாது. குழப்பத்தின் மத்தியிலும் கூட ஒருவர் உறுதியாக அமைதியாக இருப்பாரேயாகில் அவர் மெய்யான சமாதானத்தை அடைந்துள்ளார் எனலாம். அவர்கள் மனவுறுதி கொண்டவர்கள்; உம்மீது நம்பிக்கை உடையவர்கள்; அவர்களை அமைதியால் நீர் உறுதிப் படுத்துகின்றீர் (எசா 26;3 ).

இவ்வாறான நிலையான சமாதானத்தை மனிதன் அடைவது இலகுவான காரியமல்ல. பயம், வெறுப்பு, பொறாமை போன்றவற்றை அவனால் தவிர்க்க முடிவதில்லை. இன்று நம்மில் பலர் இவ்வாறான துர்அதிஷ்டவசமான வாழ்க்கைக்கு நாம் வாழும் சூழலையே பழிசுமத்துகின்றோம். ஒருவனுக்கு வசதியான வீடு, சிறந்தகல்வி, நல்லதொரு தொழில், வளமான வாழ்க்கை வசதிகள், உயர்ந்தவாழ்க்கைத்தரம் போன்றவை கிடைக்கலாம், அவன் வாழும் சமூகத்தில் ஒழுக்கத்தைப்பேண சட்டதிட்டங்கள் இருந்தும்கூட நாம் சமாதானமாக வாழ முடிவதில்லை.

இன்று சமாதானம் வேண்டும் மனிதன் மதங்களை நாடுகின்றான், நீதியோடு கூடிய சமாதானத்திற்காக வழிபாடுகள், மன்றாட்டுக்கள் என்பன இடம் பெறுகின்றன. எமது அன்றாட வாழ்க்கையில் எல்லாக்காரியங்களிலும் மதம் முக்கியபங்கினை வகிக்கின்றது, எல்லா மதங்களும் மனிதன் நல்லவற்றையே செய்ய வேண்டுமெனப் போதிக்கின்றன. எனினும் தான் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் மதத்தினை தனது வாழ்க்கையில் காண்பிப்பதற்கான வல்லமை அவனிடம் இல்லாமல் இருப்பதையே இன்று காண்கின்றோம். முன்னொரு காலமும் இல்லாத அளவிற்கு இன்று எமது சமூதாயத்தில் குற்றச்செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. கொலைகள் தடுத்து நிறுத்த முடியவில்லை. இவற்றுக்கான காரணங்கள் அவனுடைய உள்ளத்திலிருந்தே எழுகின்றன.

சில காலங்களுக்கு முன்னர், கென்னடி, மாட்டின்லூதர்கிங் போன்றோர் கொலை செய்யப்பட்டபோது உலகம் முழுவதும் அதிர்ச்சியடைந்தது. அப்பொழுது துப்பாக்கி விற்பனைகள் மட்டுப்படுத்தப்பட வேண்டுமென்ற கோஷங்கள் எழுந்தன. ஒரு சிந்தனையாளர் "மனிதனைக் கொல்லுவதும் துப்பாக்கியல்ல, மாறாக ஒரு மனிதனே இன்னொரு மனிதனைக் கொல்லுகிறான்'' என்று கூறினார், எந்தவொரு சட்டதிட்டமும் மனிதனது உள்ளத்தை மாற்றமுடியாது. துப்பாக்கிகளை எடுத்து விட்டால் மனிதன் கத்திகளை உபயோகிப்பான், கத்திகளை அகற்றி விட்டால் அவன் கொலை செய்ய வெறும் கைகளைக் கூட உபயோகிப்பான். எனவே தான் யேசு சொன்னார், "ஏனெனில் மனித உள்ளதிலிருந்தே பரத்தமை, களவு. கொலை, விபச்சாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றைச் செய்யத்தூண்டும் தீய எண்ணங்கள் வெளிவருகின்றன ( மாற்7:21-22).

G. செபஸ்தியாம்பிள்ளை
ஆசிரியர்
யாழ் / மத்திய கல்லூரி

மனிதனை அவனுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை அழித்துப்போடுகிற அவனுடைய உள்ளத்திலுள்ள பாவமாகிய வியாதிகளைப் போன்றது உலகத்திலே ஒன்றுமில்லை, எனவே உண்மையான சமாதானம் வேண்டுமாயின் ஒவ்வொரு தனி மனிதனுடைய வாழ்க்கையிலும், உள்ளத்திலே ஒரு முழுமையான மாற்றம் ஏற்பட வேண்டும், ஆவிக்குரிய புதிய பிறப்பினாலேயே இந்தப் புதிதான உள்ளத்தைப் பெறமுடியும். இயேசு கூறினார்:

" நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்என்றுநான் உமக்குக் கூறியது பற்றி நீர் வியப்படைய வேண்டாம்''
(யோவான் 3:7).

இது மறு பிறப்பல்ல ஆவிக்குரிய பிறப்பாகும், இதை நம் ஆண்டவராகிய இயேசு நமக்குத்தரக் காத்திருக்கின்றார்,

எனவே நாம் ஒவ்வொருவரும் சமாதானம் செய்வோராக மாறுவோம், தனிமனிதனுடைய வாழ்விலே சமாதானம் மலர, குடும்பத்திலே சமாதானம் மலரும்; குடும்பத்திலே சமாதானம் மலர சமு

( தொடர்ச்சி 6ம் பக்கம் )

**இறைவனின் மாபெரும் புதுமை:**

**சாதாரணமானவர்**

**அசாதாரணமானவற்றைச்**

**செய்யக்கூடியதாயிருத்தல்.**

# யாழ் திருச்சபை வரலாறு

## 5. நவீன யாழ் திருச்சபை

அருள்திரு.
இ. ம. ஜெயசீலன்

### 16ஆம் 17ஆம் நூற்றாண்டுகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**யாழ் கிறிஸ்தவ விதைப்பு**

யாழ்ப்பாணத்து கிறிஸ்தவ வரலாறு, மன்னாருடன் தொடங்குகிறது. கோட்டை இராச்சியத்தில் பிரான்சீஸ்கன் மிசனரிகள் வந்து இறங்கிய சில வருடங்களுக்குள்ளேயே (1540ல்) யாழ்ப்பாணத்தில் பிரான்சீஸ்கன் மிசனரிகள் நற்செய்தி அறிவிப்பு வேலையை ஆரம்பித்தனர். ஆயின் அது பெரும் பயன் அளிக்கவில்லை.

புனித பிரான்சீஸ்கு சவேரியாரின் கடிதத்தை இங்கு கணிப்பில் எடுப்பது நல்லது. 1546 மார்ச் 18ஆம் நாள் எழுதிய கடிதத்தில் இப்புனிதர் நம் மண்பற்றிக்கூறியவை:

ஈழம் பெரும் அறுவடை செய்யப்படக் கூடிய ஒரு தீவு. என் பெயர் கொண்ட ஒருவரை, 1544ல் ஈழத்து மண்ணுக்கு அனுப்பி, மன்னாரில் ஒக்டோபரில் பலருக்கு ஞான தீட்சை அளித்திட, நவம்பரில் சங்கிலி அரசன் தன் படையை அனுப்பி 500க்கும் மேற்பட்டோரைக் கொன்றான்.

**பிரான்சிஸ்கன் குருக்கள்**

1543ம் ஆண்டில் கோட்டை இராச்சியத்தின் அரசனான புவனேகபாகுவின் அழைப்பின் பேரில் ஆறு பிரான்சீஸ்கன் குருக்கள் இலங்கைத் தீவு முழுவதிலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்க உத்தரவு பெற்று நற்செய்தியை அறிவிக்கத் தொடங்கினர். பின்வரும் ஏழு சத்தியங்களான I. இறைவன் II. மோட்சம் III. வானதூதர் IV. புனிதர்கள் V. பிசாசு VI. புண்ணியம் VII. பாவம் பற்றி வாதாடினர். அரசன் மனந்திரும்ப மறுத்தாலும், மக்கள் மத்தியில்போதிக்க அனுமதி அளித்தான். ஆயின் கிறிஸ்தவர்களாக மாறியவர்களில் விசேடமாகத் தன் அரண்மனையைச் சார்ந்தவர்களின் நில, புல உடமைகளைப் பறித்து கிறிஸ்தவர்கள் ஆகாமல் தடுத்தான்.

**அணுகு முறைகள்**

கிறிஸ்தவ நற்செய்தி அறிவிப்பைப் பொறுத்த மட்டில் இரு வகை அணுகு முறைகள் கையாளப்பட்டன. அரசனையும் அரச குடும்பத்தினரையும் மனமாற்றம்செய்யும் முயற்சி; இதனைப் பிரான்சீஸ்கன் துறவிகள் புவனேகபாகுவின் அரண்மனைப் போதகத்தில் செய்ய முயற்சித்தனர்.

அரசன் மனம் மாறினால், இராச்சியம் முழுவதும் கிறிஸ்தவம் ஆகும். இது அசோகச் சக்கரவர்த்தி, தேவநம்பிய திஸ்ஸவை மனம் மாற்றிய காலந்தொட்டு வரலாற்றில் நிரூபிக்கப்பட்டு வந்துள்ளது.

அடுத்தது குடிமக்களை மனந்திருப்புதல். இதுவே புனித பிரான்சீஸ் சவேரியார் தமிழ் நாட்டில் செய்தது. பாமர மக்களையும், புத்திஜீவிகளையும், சாதாரண மக்கள் குழுமங்களின் தலைவர்களையும் மனம் மாற்றினர். திருவாங்கூர் முக்குவர் 'தூத்துக்குடிப் பரவர், இலங்கைக் கரையோரக் குடிமக்கள் ஆகியோர் தங்கள் சாதித் தலைவர்களுடன் மனம் மாறினர்.

**புனித சவேரியார்**

இவர்களுக்குத் தொழில் செய்யும் வசதிகளையும்,பாதுகாப்பையும் சுதேச அரசர்கள் அளிக்காதபோது, மிசனரிகள் போர்த்துக்கேயரின் உதவியுடன் அளிக்க முயற்சித்தனர். இதுவே புனித சவேரியார் 1544 டிசம்பர் 18ல் எழுதிய கடிதத்தில்

" கவர்னரிடம் சென்று யாழ்ப்பாண அரசன், மன்னார்க் கிறிஸ்தவர்களை நூற்றுக் கணக்காகக் கொன்று குவிப்பதற்காகத் தண்டிக்கப் பட வேண்டும்"

என ஊக்குவிப்பதற்குமுதல் முக்கிய காரணம்,

1536ம் ஆண்டு முகமதியர்கள் உயிரோடு போராடிக் கொண்டிருந்த காலத்தில் தான் போர்த்துக்கேயர், அவர்களை விடுவித்து திருமறையிற் சேர்க்க உதவினர். முதலில் 85 பரதத்தலைவர்களும் பின்பெரும் பாலான ஆண்களும் 1536 ஆம் ஆண்டு மார்ச், ஏப்பிரல் மாதங்களில் தூத்துக்குடியில் முத்துக்குளிப்புக்காகக் கூடிவந்திருந்த போது முத்துச் சிலாப முகாம்களிலேயே அவர்களுக்கு ஞான தீட்சை வழங்கப் பட்டது. ஆனால் பெண்கள், முதியோர், குழந்தைகள் அனைவரும்மே முதல் ஒக்ரோபர் வரை அவர்களது சொந்த ஊர்களிலும் வீடுகளிலும் திருநீராட்டுப் பெற்றனர்.

புதிதாகமனந்திரும்பியபரத மக்களைத் திருமறையில் திடப்படுத்த சவேரியாரையும், மான்சிலாசையும் யேசு சபை அனுப்பியது. 1542ல் சவேரியார் இந்தியா வந்தார். அதே ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் மணப்பாடு வந்தார். அவ்வூர் மக்களுக்கு முதன் முறையாயாகத் தமிழில் செபங்களையும், பக்திப் பாடல்களையும் கற்றுக் கொடுத்தார். தளர்வுற்றுக்கிடந்த அவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்தினார் ஏழு ஆண்டுகளாக ஞான தீட்சை பெறாத சுமார் 10.000 குழந்தைகளுக்கும் இன்னும் சில பெரியோருக்கும் ஞானதீட்சை வழங்கினார். ஊர்கள் தோறும் ஓலை வேய்ந்த ஆலயங்களை எழுப்பினார். சிறுவர்களுக்காகப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினார். ஆலயங்களில் செப வழிபாடு நடத்தவும், மறைக் கல்வி போதிக்கவும், கணக்குப் பிள்ளைகளை நியமித்தார்.

இதன் எதிரொலியே மன்னார் மக்கள், புனித சவேரியாரைத் தமக்கும் ஞானதீட்சை அளிக்கும்படி அழைக்கத் தூண்டியது. ஆகவே1544 ஆவணி 21ந் திகதிக் கடிதத்தில்

''நாகபட்டண கப்ரின்யாழ்ப்பாண அரசனுடன் நல்லுறவு கொண்டவனாதலால், மன்னார் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தவும்''

என மான்சிலால்சுவாமிக்கு எழுதினார். ஆனால் மன்னருக்குப் புனிதரால் அனுப்பப்பட்ட பிரான்சீஸ் சவேரியார் என்ற பணியாளர், குருவா? தியாக்கோனா? துறவுச்சகோதரரா? எனத்தீர்மானிக்க முடியவில்லை. அவரும் 500 புதுக் கிறிஸ்தவர்களுடன்வேதசாட்சி முடிபெற்றார். (வளரும்)



## வாசகர் கருத்து



என் இனிய காவலனே
அன்பு வந்தனங்கள்.
தித்திக்கும் நல்
தேன் மதுரப்
பாசறையால் என்
எழுதுகோலுக்கு
புத்துயிர் அளித்தாய்.
உன் வரவை
ஆவலுடன் எதிர்
பார்த்திருந்த எனக்கு
நல்விடை நீ தந்தாய்.
இனிவரும் காலத்திலும்
உன் மாண்புநிறை பணி
வாரம் ஒரு மலராக
மலர்ந்து
மணம் வீசட்டும்.
இருப்பிழத்த மக்களாக
அலையும்
என் போன்றோருக்கு
உனது நற்செய்தி
அறிவுரைகளால்
நல் இன்பம்
அளித்திடுவாய்.
பல சவால்களின்
மத்தியிலும்
உனது பணி
எந்நாளும்
பூத்துக்குலுங்க
இறையவனை
வேண்டி அன்புடன்
வாழ்த்துகிறேன்.

S.G. றூபவசந்தினி
உடையார்கட்டு

---

நீ திறம்பட
ஒரு காரியத்தைச் செய்யும்போது
தோல்வி பற்றிக் கவலைப்பட
உனக்கு நேரம் கிடைக்காது.

---

## ஒரே ஒரு ஊரிலே....

### 5. எதில் வெறுப்பு?

அவளுக்கு நாய்க்குட்டி என்றால் கொள்ளை ஆசை. ஒரு அழகிய சடை நாய்க்குட்டி ஒன்றை அவள் வளர்த்து வந்தாள். எப்போதும் மடியில் வைத்துக் கொஞ்சிய படியே இருப்பாள்.

நாய்க்குட்டிக்கு மீனெண்ணெய் என்றால் மிகவும் நல்லது, கொழ கொழ என்று இருக்கும் என்று யாரோ சொல்லி விட்டார்கள். அவ்வளவுதான். மீனெண்ணெயை வாங்கிய அவள் தினமும் காலையில் முதல் வேலையாக தனது நாய்க்குட்டிக்கு அதனைப் பருக்குவாள்.

கால்களுக்கிடையில் நாய்க்குட்டியின் தலையை வைத்து கைகளால் வாயைப் பிளந்து நாய் திணறத் திணற எப்படியும் பருக்கி விடுவாள்.

ஒரு நாள் நாய் திமிறிய திமிறலில் அவளது பிடி வழுகிப் போனது. நாயும் தப்பியது. மீனெண்ணையும் சிதறிப்போனது.

அவளுக்கோ அடங்காத கோபம்.

அப்பொழுதுதான் அவள் எதிர்பாராத ஒன்று நடந்தது. ஓடிப்போன நாய்க்குட்டி மெல்லத் திரும்பி வந்து நிலத்தில் சிதறுண்டிருந்த மீனெண்ணையை நக்கத் தொடங்கியது. நாய் வெறுத்தது மீனெண்ணையை அல்ல, அது கொடுக்கப்பட்ட விதத்தைத்தான் என்ற உண்மை அப்போதுதான் அவளுக்குப் பிறந்தது.

பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும்,வழிகாட்டிகளுக்கும் இக் கதை சமர்ப்பணம்.

## திருவிவிலியம்..,

மரியாதைப் பண்மையைப் பயன் படுத்திப் பொது விவிலியம் பெண்களுக்கும் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டோருக்கும் ஏழைகளுக்கும் உடல் மன நோயாளருக்கும் மதிப்பு அளிக்கிறது. இரு பாலாருக்கும் பொருந்தப் பேசி ஆண், பெண், சமத்துவ சமுதாயப் பார்வையை வெளிப்படுத்துகிறது.

ஒரு சமுதாயம் கொண்டுள்ள நூல்களுள் பல அந்தச் சமுதாயத்தின் தாக்கத்திற்கு உட்பட்டு அச் சமுதாயத்தின் மதிப்பீடுகளையும்,குறைநிறைகளையும் பிரதிபலிப்பனவாக அமைகின்றன. ஆனால் நூல்களுள் சில அச்சமுதாயத்திற்கு ஒரு தாக்கத்தை அளித்து அச்சமுதாயத்தின் எதிர்மறை மதிப்பீடுகளை மாற்றி உயர்ந்த இலட்சியங்களைக் கொடுக்கக் கூடியவையாக இருக்கின்றன. விவிலியத்தைப் பொறுத்தவரை பல மக்களின் வாழ்க்கை முறையில் ஆக்கப் பூர்வமான ஒருசக்தியாக அமைந்திருந்தது; இன்றும் அமைந்துள்ளது. ஆங்கில மொழியின் மிகச் சிறந்த விவிலிய மொழி பெயர்ப்பான The New Revise Standard Version தன் முன்னுரையில் அதன் முன்னோடியான King James version விவிலிய மொழிபெயர்ப்பு, ''வேறு எந்த நூலையும் விட ஆங்கிலம் பேசும் மக்களின் தனிப் பண்புகளும் பொது அமைப்புகளும் உருவாக அடிப்படையாய் இருந்துள்ளது. எனவே அவர்கள் சமுதாயம் அதற்கு மிகவும் கடன்பட்டுள்ளது'' என்று கூறுகிறது.

தமிழ்ப் பொது விவிலியமும் தமிழ் பேசும் மக்களிடையே நல்ல சில பார்வைகளை உருவாக்க முயல்கிறது; தமிழ்ச் சமுதாயத்தில் நடைமுறையில் இருக்கும் உயர்வு-தாழ்வு நிலைகளும் மனப்பான்மைகளும் மாறத் துணை புரிகிறது; மாற்றுக் கலாச்சாசாரத்தை ஊக்குவிக்கிறது. அடிமைகளுக்கு விடுதலை கொடுத்து, அகதிகளைச் சொந்த நாட்டிற்கு அழைத்து வந்து, ஆதரவற்றோரின் அரணாய் இருந்தவர் கடவுள். ஏழை எளியோருக்கு நற்செய்தியும், ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வும், ஒதுக்கப்பட்டோருக்கு உறவும் கொண்டு வந்தவர் இயேசு.இவர்களின் போதனைகளைத் தாங்கியுள்ள விவிலியத்தின் தமிழாக்கம் இம்மாற்றுக் கலாச்சாரப் போக்கைக் கொண்டுள்ளது மிகப் பொருத்தமானதே!

## ஆசிரியர்...

வாழ அழைக்கப்படுகின்றோம். நாம் பாடசாலைக் கல்வியுடன் தரித்து விடாது கிறிஸ்துவிற்கு, சாட்சியம்பகரவும் அவர் நெறியைத்தொடரவும் வேண்டியது எமது கடமை. எமது பணிகளில் இறைவனின் துணையோடு முன்னோக்கிச் செல்வோம். ''நன்று, நன்று நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே'' (லூக் 19:17) என்று கிறிஸ்து எம்மை ஏற்றுக் கொள்ள எம்மை உருவாக்கிக் கொள்வோம். இதே வேளையில் மாணவர்கள் மலர் மாலைகளை ஆசிரியர்க்கு அணிவது மட்டுமல்ல, நல்ல சமுதாயத்தைக் கட்டியெழுப்பவும், நற்பிரஜைகளாக வளரவும் ஆசித்து நிற்கின்றோம்.

# செய்திகள்

ஆபிரிக்காவில் 14 கத்தோலிக்க வானொலி நிலையங்கள் உள்ளன. அதில் தன்ஸானியாவில் இயங்கும் ''ருமைனி வானொலி''யை கேட்பவர்கள் தொகை 2 மில்லியன் பேர் என புள்ளிவிபரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

சையிரில் இயங்கும் கத்தோலிக்க வானொலிக்கு இத்தாலிய ஆயர் மன்றம் நிதியுதவி அளித்து வருகிறது.

ஐவரி கோஸ்ற்அரசு அங்குள்ள கத்தோலிக்க வானொலி நிலையத்துக்கு உதவி செய்கிறது.

★ ★ ★

பொதுப்பணிகளில் ஈடுபட்டு வருவதற்காக கொரியாவைச் சேர்ந்த அருட்தந்தை யோண்—ஓ—ஹூங்—ஜின் இவ்வாண்டுக்கான ''மக்சைசை'' என்ற விருதைப் பெறுகிறார்.

பிலிப்பைன்ஸின் மறைந்த ஜனாதிபதிரமொன் மக்சைசையின் நினைவாக ஆண்டுதோறும் வழங்கப்படும் இவ் விருதை ''ஆசிய நோபல் பரிசு'' எனவும் அழைப்பதுண்டு.

அருட்தந்தை யோண் ஏழைகள், அனாதைகள், நோயாளிகள், மனநோயாளர் போன்றவர்கள் மத்தியில் பொதுப்பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.

50 ஆயிரம் ஆமெரிக்க டொலரும் இவ்விருதுடன் வழங்கப்படுகிறது.

★ ★ ★

முஸ்லிம் நாடான பாகிஸ்தானில் கிறிஸ்தவ சிறுவர்களுக்காக வெளியாகும் மாத இதழான 'ஹம்ஜொலி' அதன் எட்டாவது ஆண்டு விழாவை அண்மையில் கொண்டாடியது.

5000 பிரதிகள் அச்சிடப்படும் இவ்விதழின் ஆண்டு விழா லாகூரில் நடைபெற்றது.

கொண்டுறாஸ் ஜனாதிபதி காலோஸ் றொபேர்ட்டோ றீனாவுக்கு தாய்வானில் உள்ள கத்தோலிக்க பல்கலைக்கழகம் கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

ஜனநாயகம் மனித உரிமைகள், சமூக நீதி போன்ற முறையில் இவர் ஆட்சி செய்கிறார் என இப்பல்கலைக்கழகம் பாராட்டியுள்ளது.

வடகொரியர்கள் சிலருடன் போலாந்தில் சந்தித்துப் பேசிய தென்கொரிய அருட்தந்தை ஒருவரை கைது செய்யுமாறு விடுத்த உத்தரவை உயர்நீதிமன்றம் தடை செய்துள்ளது.

★ ★ ★

திபெத்தின் பௌத்த மத ஆன்மீகத்தலைவர் தலைலாமா திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரை அண்மையில் வத்திக்கானில் சந்தித்தார்.

தலைலாமாவும் திருத்தந்தையும் இதற்கு முன்னர் 1980 இலும், 1982 இலும் சந்தித்துள்ளனர்.

1973 இல் மறைந்த திருத்தந்தை 6வது சின்னப்பரையும் தலைலாமா சந்தித்துள்ளார். திபெத்தை சீனா ஆக்கிரமித்ததையடுத்து, தலைலாமா அங்குதிரும்பமுடியாதுள்ளார்.

★ ★ ★

சர்வதேச இளைஞர் தினம் அண்மையில் யப்பானின் தலைநகர் டோக்கியோவில் கொண்டாடப்பட்டது.

முப்பது நாடுகளைச்சேர்ந்த இரண்டாயிரம் பேர் இதில் கலந்துகொண்டனர்.

டோக்கியோ புனித மரியன்னை பேராலயத்தில் கருதினால் பீற்றர் ஷிறயநாகி தலைமையில் கூட்டுத்திருப்பலி நடைபெற்றபோது சீன, ஆங்கில, பிரான்ஸிய, கொரிய, ஸ்பானிய, யப்பானிய, வியட்னாமிய மொழிகளில் வழிபாடுகளும் பாடல்களும் இடம்பெற்றன.

நற்செய்தியை மையமாகக் கொண்டு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

★ ★ ★

மத்திய ஆபிரிக்க நாடான புறுண்டியில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் இரு அருட்சகோதரிகளும், அருட்தந்தை ஒருவரும். காயமடைந்தனர்.

இவர்கள் பயணம் செய்த கார் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

புறுண்டியில் தொடரும் இன வன்முறைகளினால் பல லட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். லட்சக்கணக்கான மக்கள் அண்டைநாடுகளில் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.

பாதிக்கப் பட்டவர்களுக்கு கத்தோலிக்க திருச்சபை பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது.

இங்கு இடம்பெறும் இனமோதல்கள் நிறுத்தப்பட்டு அமைதியும், சமாதானமும் ஏற்படவேண்டும் என புறுண்டி கத்தோலிக்க ஆயர்கள்கோரிக்கைவிடுத்துள்ளனர்.

திருத்தந்தையும் போர் முடிவுக்கு வந்து சமாதானம் நிலைபெறவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

அருட்திரு சகாயதாசன் அவர்களின் சகோதரன் அந்திரேஸ்பிள்ளை யேசுதாசன் (வயது 50) வன்னிப்பகுதியில் இடம்பெயர்ந்திருந்தபோது நோய்வாய்ப்பட்டு இயற்கை எய்தினார். இவரின் இறுதிச் சடங்குகள் கோணாவில் ஆலயத்தில் திருப்பலியுடன் நிறைவேற்றப்பட்டது.

தகவல்: அ. பத்மதாசன்
27, பழைய பூங்கா வீதி
யாழ்ப்பாணம்

## விண்ணக வாழ்வில் எட்டு ஆண்டுகள்



P. J. அமிர்தநாயகம்
(இளைப்பாறிய ஆசிரியர்
சம்பத்திரிசியார் கல்லூரி)

தோற்றம் 22.02.1912 மறைவு 08.11.1988

இவரின் ஆன்ம சாந்திக்காக 05.11.96காலை 6.00 மணிக்கு யாழ் / அடைக்கல அன்னை ஆலயத்திலும், அருள் ஆச்சிரமத்திலும் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும்.

மனைவி, மக்கள், உறவினர்
A/16/96

## 3ஆம் வருட நினைவு



அமரர் யோண் பிலிப்
(மலேயன் பென்சனர்)
வசாவிளான் ஒட்டகப்புலம்

அன்னை மடியில் 1907.09.27 ஆண்டவன் அடியில் 1993.10.26

நித்திய இளைப்பாற்றியை இவர்களுக்கு அளித்தருளும் யேசுவே. முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். அருள் ஆச்சிரமத்தில் 26-10-96 காலை 6.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் பங்கு பற்றி இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டும்படி அன்பு நெஞ்சங்களை வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
A/18/96

## போதனையல்ல...

டாயா? பங்குச் சுவாமி முறைப்பாடு, உன்னைப் படிப்பித்த ஆசிரியர் முறைப்பாடு, இன்னும் எத்தனை பேர். அப்பாவும் உனக்கு எத்தனை தடவை சொல்லிப் போட்டார்'' என்றாள் யாழினி. ''அக்கா! அப்பாவின் பேச்சை விடு. அப்பா செய்யாத தொன்றையா நான் செய்கிறேன்? அப்பா முந்தி எங்களைப் பூசைக்குக் கூட்டிக் கொண்டு போய் பிரசங்கம் கூறும்போது கடைக்குத் தேத்தண்ணீர் குடிக்கக் கூட்டிக் கொண்டு போவார். நற்கருணை கொடுக்கும்போது படியில் இருந்து ஆட்களோடு கதைப்பார். அதைத்தானே நானும் செய்கிறேன். இப்ப என்ன செய்கிறார்? எங்களைப் பூசைக்குப் போகச் சொல்லி விட்டுத் தான் நல்லாய்க் குடித்துப் போட்டுக் கத்துவார். இல்லாவிட்டால் காட்ஸ் விளையாடுவார். அவருக்கு ஞாயிற்றுக் கிழமை பூசைக்குப்போகவேண்டுமென்று இல்லையா? அவர் தன்னைத் திருத்தக் காணன், என்னைத் திருத்த வந்திட்டார்.'' குமாரின் குரல் அலட்சியத்துடன் தொனித்தது.

''குமார் நீ வளர்ந்தவன் உனக்கு அறிவிருக்கு, நல்லது கெட்டது தெரியும். அப்பா அப்படிச் செய்கிறார் என்றால் நீயும் அப்படிச் செய்ய வேண்டுமா? உன்னைப்பார்த்து தம்பி தீபனும் நடக்கப்போகிறான்,'' என்று பெருமூச்சுடன் கூறினாள் யாழினி. ''சரிதான் போ அக்கா உன்ர வேலையைப் பார்,'' எனக் கூறிய குமார் பின் வளவிற்குப் பேனான்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த யோசேப்புக்கு மகன் மீது கோபம் ஏற்படவில்லை. பாடசாலையில் ஆசிரியரின் கருத்தால் பக்குவப் பட்டிருந்த அவர் உள்ளம் உண்மையை ஏற்றுக் கொள்ளத் தயாராகி விட்டது. போதனையை விட அதனைத் தன் வாழ்வில் வாழ்ந்து காட்டுதலே தேவையானது என்பதனை அவர் உணர்ந்து கொணடதால், உள்ளத்தில் ஓர் புத்துணர்வு தோன்றியது. வாழ்வின் புதிய அத்தியாயத்தைத் தொடங்கத் திடங்கொண்டவராக வீட்டினுள்ளே சென்றார் யோசேப்.

## 3ஆம் மாத நினைவும், 4ஆவது அகவையும்



செல்வி. ஆன் சிந்துஜா கலிஸ்ரஸ்

அன்னை மடியில் 15.10.92 ஆண்டவன் மடியில் 19.7.96

தங்கமணி மாடத்தின் வெண் புறாவே
தலைமறைவாய் நீ பறந்த மூன்று திங்கள்
பொங்குதுயர்க் கடலாழ்ந்தே புலம்புகின்றோம்
புதுநிலவு மலர்களிலே நின் முகத்தை
எங்கெங்கும் தேடிநிதம் வாடுகின்றோம்
இல்லத்துக் கொளிபொழிந்தபொன்விளக்கே
சங்கமணித் தமிழ்சொரிந்த மழலைச் செல்வி
சாந்திதவழ் வானகத்தே சந்திப்போம் நாம்

எம் அன்பு நிறை சிந்துஜா!

உம் 4ஆவது பிறந்த தினத்தில் உமது 3ஆம் மாத நிறைவை நினைவு கூரவேண்டிய துர்ப்பாக்கிய சாலிகளாய்ப் போனோமே. இதை எண்ணி கண்ணீர் உகுக்கின்றோம் எம் செல்வமே!

பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரன், உற்றார், உறவினர்
72A, நக்காறோட்
யாழ்ப்பாணம்.
A/17/96

## எம்கருத்து

# மனித உரிமை மீறல்களும் சமாதானமும்

பல்வேறு துறைகளில் எமது நாடு அழிவுப் பாதையில் அதிவேகமாகச் செல்வதை நாம் கவலையோடு அவதானிக்கின்றோம்; அனுபவிக்கிறோம். அண்மைக்காலப் போர்களின் காரணமாக உயிர்களும், உரிமைகளும் குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றன. குழிகளிலிருந்து எடுக்கப்படும் அநாதரவான எலும்புக்கூடுகளும், கம்பங்களிலே தொங்கும் சடலங்களும் இன்று எமது கொடூர நிலைக்குச் சான்றாக உள்ளன.

இவ்வருடம் ஓகஸ்ட் 14 "மன்னிப்புச் சபை", எமது நாட்டின் அனைத்துச் சாராரும்—அரசும், இயக்கத்தினரும் –மனித உரிமைகளை மீறுகின்றனர் என்பதைப் பல்வேறு உதாரணங்களுடன் சுட்டிக்காட்டியுள்ளது, இவ்விதமான அறிக்கையையிட்டு உலக அரங்கின்முன் நாம் தலை கவிழவேண்டும்.

நாட்டில் "ஒருமைப்பாட்டைக் காப்பாற்றவும்", "உரிமைகளை வென்றெடுக்கவும்" நடைபெறுகின்ற போரினால் நாட்டின் சாதாரண சட்டங்களும் நிதி முறைகளும் கையாளப்படுவதில்லை. இஃது இன்று உயிருக்கே உத்தரவாதம் இல்லாத நிலையைத் தோற்றுவித்துள்ளது: இதனால், பயமும், அவநம்பிக்கையும், அங்கலாய்ப்பும் மலிந்து காணப்படுகின்றன. இவற்றால் ஏற்படும் உளத் தாக்கங்கள் பல்வேறு உடல் நோய்களாகவும் பரிணமிக்கின்றன.

இந்நிலையில், யாழ். மறைமாவட்ட நீதி – சமாதானத்துக்கானஆணைக்குழுவினதும், யாழ் சமாதானம் – நல்லெண்ணத்துக்கான குழுவினதும் செயற்பாடுகளும், இருதலைக் கொள்ளி எறும்புகள் போலத் துடிதுடிக்கும் மக்களுக்குச் சிறு நம்பிக்கையைத் தருவனவாக அமைகின்றன.

ஆயுதக் கலாச்சாரத்தின் வளர்ச்சியினால் மனித உரிமை மீறல்கள் படிப்படியாக வளர்ந்துள்ளன. இதே கலாச்சாரம் இதற்குத் தீர்வு தரும் என்று எண்ணுவது எம் அனுபவத்தின் அடிப்படையில் யதார்த்தமற்றதாகத் தோன்றுகின்றது.

இந்த வெவ்வேறு குழுக்கள் கலந்துரையாடல் வழியாகநல் லெண்ணங்களை வளர்த்து, உடனடிப் பிரச்சனைகளைத் தீர்க்க முற்படுவதுடன் நின்றுவிடாது, நிரந்தரமான சமாதானத்துக்கான வழிமுறைகளைத் தேடுவதால் மட்டுமே மனித மாண்பை வளர்க்கவும், உரிமை மீறல்களைக் குறைக்கவும் கூடும் என்பதை மறக்கலாகாது.

மேலும் இக்குழுக்களின் செயற்பாடுகள் உண்மையின் அடிப்படையிலும், நடுநிலைமையிலும், வரலாற்று நிகழ்வுகளிலும் சிந்தித்துச் செயல்படுவனவாக அமைதல் வேண்டும்.

பல்வேறு விதமான நிபந்தனைகளுடன் தாம் பேச்சுக்குத் தயார் என்பதைப் பலசாராரும், முரண் பாடுகளுடன், வெவ்வேறு இடங்களில் வெளியிட்டிருப்பதைப் பத்திரிகைச் செய்திகள் எமக்கு எடுத்துரைக்கின்றன. நல்லெண்ணங்களை வளர்த்து, சமாதானத்திற்கு வழிகோலும் பேச்சுவார்த்தைகளுக்கு இவர்களை ஊக்கப்படுத்துவதுஇன்றைய முக்கியமான ஒரு குறிக்கோளாகும். இக்குழுக்கள் இக்குறிக்கோளையேற்றுச் செயற்படுவது எல்லோர்க்கும் நன்மை பயக்கும்.

# அமலமரித்தியாகிகளுடன் இணைந்திட வருக

பிரஞ்சுப் புரட்சியினால் உடைந்த சமுதாயத்தை உருவாக்க புனித இயூஜின் டி மசெனெட் கண்ட கனவு

"எளியோர்க்கு நற்செய்தி நவில
இறைவன் என்னை அனுப்புகின்றார்"
என்பதாகும்.

**இளம் உள்ளங்களே!**

அழைத்தல் விதையை அன்பின் ஆண்டவர்
உங்கள் உள்ளத்திலும் விதைத்திருக்கலாம்.

வாருங்கள்!

வந்து பாருங்கள்!

உலகெங்கும் நற்செய்தி நவில
அமலமரித்தியாகிகள் குடும்பத்துடன்
வந்து இணையுங்கள்.

ஆண்டு 10 | க. பொ. சாதாரணம் | க. பொ. உயர் மாணவரும் மேற்பட்டவரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு:
புனித சூசையப்பர் அ.ம.தி.குருமடம்
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

A/19/96

# புனித யூதாததேயு ஆலயத் திருநாள் 27.10.97

அரியாலை புனித யூதாததேயு ஆலயத்திருநாள் எதிர் வரும் 27 ம் திகதி காலை 7 மணிக்கு கொண்டாடப்பட உள்ளது. ஆயத்த வழிபாடு சனிக்கிழமை பி. ப. 4.00 மணிக்கு இடம் பெறும்.

இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்ட 25 வது ஆண்டு நிறைவை இவ்வருடம் நினைவு கூருகிறோம்.

குறிப்பு :– திருப்பலிக்கு வருபவர்கள் ஆலய வளவின் தெற்குப்பகுதியில் இருக்கும் ஒழுங்கையூடாக வரும்படியாகக் வேண்டப்படுகிறீர்கள்.

பங்குத்தந்தையும்
பங்குமக்களும்.

A/20/96

# யாழ்ப்பாண மறைமாவட்ட சேமலாப சங்கம்

1996 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆம் திகதி நடைபெற்ற மேற்படி சங்கத்தின் கூட்டத்தில் இக்கால கட்டத்துக்கு ஏற்ப மேற்படி சங்கத்தைக் குலைத்து முடிவுக்கு கொண்டுவரவும் இச்சங்கத்தின் அங்கத்தவர்கள் யாழ்ப்பாண மறைமாவட்ட பொருளாளருடன் தொடர்பு கொண்டு தங்களுக்குரிய பணத் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இவ்வறிவித்தலை மேற்படி சங்க அங்கத்தவர்கள் யாவருக்கும் அறியத்தருகிறேன்.

J. P. E. செல்வராசா.
மறைமாவட்ட பரிபாலகர்

### வன்னியில் திருமறைக்கலாமன்றம்

திருமறைக் கலாமன்றம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பிலும் அதன் பணிகளை ஆரம்பித்துள்ளது.

புனித சூசையப்பர் ஆலய மூன் மண்டபத்தில் 01–08–96 அன்று இதன் புதிய பயிலகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பங்குத்தந்தை அருட்திரு சந்திரபோஸின் முயற்சியுடன் புலம் பெயர்ந்துள்ள மன்ற அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன் இப்பயிலகம் திறந்து வைக்கப்பட்டது.

## வெள்ளி விழா...

ஆசனக்கோயில் முருங்கன், உரும்பிராய், விடத்தல்தீவு ஆகிய பங்குகளில் பணியாற்றினார்.

ரோமையில் மறைபரப்பு இறையியலில் கலாநிதிப்பட்டம் பெற்று தற்போது ஜேர்மனியில் வாழும் தமிழ்க் கத்தோலிக்கர் மத்தியில் பணிபுரிகின்றார்.

இரு அருட் தந்தையர்களும் நீண்ட ஆயுள், ஆன்மீக பலத்துடன் பணிபுரிய இறையாசீர் வேண்டுகிறோம்.

## தொடுகை...

யாக இது வெளிவந்தது ஒரு சாதனை என்றார்.

அருட்திரு P. இருதயதாஸ்:

மறைந்திருக்கும் கலைஞர்களை வெளிக்கொணர இது போன்ற முயற்சிகளில் இளைஞர் உருவாக்கல் இயக்கம் ஈடுபட்டது பாராட்டுக்குரியது என்றார்.

அருட்திரு M. V. E. ரவிச்சந்திரன்:

யாழ் மறைவட்டக்குருக்கள் யாழ் திருச்சபை சார்பில் பாராட்டுக்கள் வழங்கினர்.

திரு S. ஜோசப்பாலா:

இந்நூலின் அழகமைப்பும் செய்தித் தேடலும் அச்சுக்கணக்கு சவால் விடும் வண்ணம் அமைந்துள்ளது. இக்காலத்தின் பதிவாகத்தந்த இவரது முயற்சி ஒரு அசுர சாதனை என்றார்.

## சமாதான...

தாயத்திலே சமாதானம் மலரும்; இறுதியில் நாம் ஏங்கித் தவிக்கும் சமாதானம் நம் நாட்டிலே மலரும். இதை இறைவன் ஒருவரே தரவல்லவர், எங்களுடைய எண்ணங்கள், சிந்தனைகள் நல்லவையாக மறும் போது எங்களுடைய எண்ணஅலைகள் இறைசக்தியாக மாறி எம் நாட்டிற்கு நீதியோடு கூடிய சமாதானத்தை தரும் என்பது நிச்சயம். சமாதானத்தை நோக்கிய பயணத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் பொறுப்புண்டு.


கிறிஸ்மஸ் வாழ்த்துவான் கடிதம்



Christmas Aerogramme

விலை ரூபா 18

எதிர்பாருங்கள்

வழிபாட்டு நாட்காட்டி
1997

புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
360 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


★ நீரே என் பாதுகாப்பு, நீரே என் கேடயம் (சங் 115 : 114) ★

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1996 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. இல QB/1001/58/81